11th August 1965]

ஆகவே கைத்தறியாளர்களுக்குப் பயன்படுகிற வகையில் நூற்பு ஆலைகள் இத்தனை சதவிகிதம் சிட்டமாகத்தான் தயாரிக்க வேண்டும் என்று கட்டுப்பாடு விதிக்க உத்தரவு போடுவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : புதியதாக உத்தரவு போட வேண்டும் என்ற அவசியம் இல்லை. அவர்கள் 50 சதவிகிதம் சிட்டமாகத்தான் தயாரிக்க வேண்டுமென்ற கட்டுப்பாடு நீண்ட காலமாக விதிகளில் இருக்கின்றன.

Accumulation of stock in Textile Mills

* 216 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that there is heavy accumulation of stock of cloth in the textile mills of the State; and

(*b*) if so, the steps taken by the Government thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No; and

(*b*) Does not arise.

Distribution of cloth and yarn

* 217 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any representation has been made to the Government of India for relaxing the rules regarding the price and distribution of cloth and yarn; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) No representations were made by the State Government regarding relaxation of price of yarn distribution. There were some informal consultations on these matters.

திரு. வை. சங்கரன் : 'இன்பார்மல் கன்சல்டேஷனில்' என்ன முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 'இன்பார்மல் கன்சல்டேஷனைப்'பற்றி வெளியில் சொல்லமாட்டார்கள்.

Intensive cultivation of food crops

* 218 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal for a scheme of intensive cultivation of food crops on an areas basis applying the principles of package scheme; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes; and

(*b*) A statement [a] is placed on the Table of the House.

[a] Printed as Appendix III on pages 775-776

[11th August 1965

திரு. வை. சங்கரன் : அந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கும்படியான நான்கு மாவட்டங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலங்கள் மொத்தம் சாகுபடி நிலங்களா ? அல்லது ஒரு பகுதியா ? எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : ஒவ்வொரு பகுதியிலும் பத்து எக்கரா என்று எடுத்து அதை ஒரு பகுதியாகப் பிரித்து இந்தச் சாகுபடித் திட்டத்தின் கீழ் கொண்டு வருகிறோம்.

புலவர் கா. கோவிந்தன் : தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் எந்த அடிப்படையில் மாவட்டங்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன ? வடாற்காடு மாவட்டம் நெல் உற்பத்தியில் முதன்மையானதாக இருந்தும் அது ஏன் எடுத்துக்கொள்ளப்படவில்லை ?

கனம் திரு. பூ. கக்கன் : விவசாய இலாகா எல்லாவற்றையும் பரிசீலனை செய்து தண்ணீர் எங்கு ஜாஸ்தியாக கிடைக்கிறதோ, அந்த இடங்கள் என்ற அடிப்படையில் இவை எடுக்கப்பட்டிருக்கின்றன. பின்னல் இதர ஜில்லாக்களுக்கும் இதை விஸ்தரிக்க இருக்கிறோம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, நெல் ப்ரொக்யூர்மெண்டில் கூட வடாற்காடு மாவட்டம் 13 லட்சம் டன் கொடுத்திருக்கிறது. செங்கல்பட்டு பத்து லட்சம் டன் தான் கொடுத்திருக்கிறது. இருந்தும் வடாற்காடு ஏன் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

கனம் திரு. பூ. கக்கன் : வடாற்காடு மட்டும் அல்ல, தென்னுற்காடும் கூடுதலாகக் கொடுக்கிறது. எல்லாவற்றையும் பரிசீலனை செய்துதான் இப்போது தண்ணீர் அதிகம் உள்ள மாவட்டங்கள் என்ற அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. அ. ராமச்சந்திர ராயர் : சிதம்பரம் தாலுகாவிற்கு பாக்கேஜ் ஸ்கீமை விஸ்தரிக்கும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : எப்போது இந்தத் திட்டம் அங்கே விஸ்தரிக்கப்படுகிறதோ, அப்போது சேர்த்துக் கொள்ளப்படும்.

திரு. கரு. சீமைச்சாமி : எந்த எந்த மாவட்டங்கள் விவசாயத்தில் சிறப்பாக இருக்கின்றனவோ, அங்கே தான் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படுகிறது. நீர்ப்பாசன வசதி இல்லாமல் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ள இராமநாதபுரத்திற்கு இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க கவனம் செலுத்தப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : முதலிலேயே சொன்னேன் நீர்ப்பாசன வசதியுள்ள பகுதியில்தான் இப்போது விஸ்தரிக்கப்படுகிறது என்று. இங்கே அதிக உற்பத்தி செய்து வறண்ட பகுதியில் உள்ள மக்கள் உணவுக்குக் கஷ்டப்படாமல் சப்ளை செய்வதுதான் நோக்கம். பின்னல் எல்லா இடங்களுக்கும் இது விஸ்தரிக்கப்படும்.